பிஸ்மில்லாஹி.

# முகவுரை.

புகழெனப்படுவவெல்லாம்,
திணைமுதலெல்லாவையுந்திருவெனக்கிளர்ந்த
தற்சுடபேதிற்றகைபவிளக்கி
யதனதனெறியேயாவனநிறீஇப்
பேதமிலாதுபேதமுடைத்தா
வுயர்திணையெனமற்றோறிமேற்கொண்
டெவ்வழிவொல்காதல்வழியுய்ப்பான்
காண்பனகேட்பகாரியமாவான்
காரணமென்னுங்கருத்தத்திணைக்கே
யுரியதென்றீந்துமுண்ணிரந்தார்ந்து
மொராஅப்பலவற்றும்விராஅப்புறமுள்ளுந்
தோய்ந்துதோயாதுமெய்ந்திணங்காது
தோற்றியவல்லவாற்றலினுய
மகத்தான "அல்லாஃசுபுகானகூவத்தஆலா" வுக்கேயுரியனவாம்.

சலவாத்தும்சலாமுமாவன,
புவனமற்றெவற்றையுநவமுறும்பலவாய்த்
தோற்றற்கமைத்தவாற்றலின்காரண
மென்னவிறையோன்றனுன்னத்தமைந்த
சோதிமயமானநீதிநாயக
ருலகினர்க்கருளாயலதுநாமும்மை
யநுப்பினேமல்லேமெனப்பெரியோன்மறை
மிசையிசைத்திட்டவிசைநபிபெமான்
ஆகிய, நாயகம், காத்திமுல் அன்பியா, செய்யிதுல்முறுபலீன் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள்மீதும் அவர்கள்ஆல் அசுகாபுகள்மீதும் என்றென்றும் உண்டாவதாகுக.

திருவளஞ்செறிந்த இலங்கையின்கண் விசேஷதலமாகிய "கண்டி
நகரில வாசஞ்செய்யும், கனம்தங்கிய சித்தி லெவ்வைமரைக்காயர்
கம்மது காசிம்மரைக்காயரவர்களால் 1892௵ ஆவணிமீ 1௳ மு
ல் மாதமொருமுறை, "ஞானதீபம்,, எனாபகரணத்துடன் ஓர்பத்
ரிகை பிரசுரிக்கப்பட்டுவந்தது. அது, இத்தேசத்திற் பலபிரிவுபட்டு
ளங்குஞ் சமயங்களுள், சைவர், கிறிஸ்தவர், புத்தர், என்னுஞ்சம
யமார்களை, நமது சமய ஆலிமசாகிபுவோடு வைத்துச் சித்தசபர்த்தா
னியதியோ டேற்கத்தக்க பல நியாயப்பிரமாணங்களால் அம்மூன்றுமத
னுசாரங்களின் பேதா பேதங்களைக் காட்டி மறுத்து, நமது வேதமே
யெவற்றினுஞ் சிறந்த பயன்பாடுடையதும, பரிசுத்த சத்தியமுடை
தென்பதுந் தோன்ற, பல திருட்டாந்தத்தோடு தெள்ளிதாய் விளக
ப் போந்திருக்கின்றது. அன்றியும், பொறாமை அகங்காரமுதலிய
ற்குணங்களை யொழித்து மனநீதியோடு பார்ப்பவர்களுக்கு நமது மட
க்க அறிவைத் தீபம்போன்று விளக்கு மென்பதற் கையமுமில்லை.

அப்பத்திரிகை வெளிப் பட்ட சில தினங்களுக்குப் பிறகு
னை மறுத்து "முஸ்லிம் நேசன்,, வழியாயச் சில வீண குதர்க்க
வாதக் கடிதங்கள் ஊழல் விளுக்களுடன் பிரசுரித்துவர்த நிமித்தம்
ஞானதீபாசிரியர் தமது 3 ம். பத்திரிகைவாயிலாற் தக்க விடையிட்டு
சமாதான நியாயமு மளித்து, இனி, இவ்வித வீண்வாதத்தில் என
பெறுமதியான வாழ்நாளைக் கழியேன், உங்கள் தூஷணத் தாலும்
கத்தாலும் எனது மகிமை குறைந்துபோகிற தில்லை, நான் கவனிக்க
ப்போகிறதுமில்லை, ஆதலால் இம்மட்டில் நிறுத்துகிறேன் என வெ
ளித்து விட்டார். அவர் கூற்றினயுமை உய்த்துணர்ந் தறியாதவழு
காறுடையோரின் "பசாது,, அடாந்தேறிய தொழியுந் தருணத்து
ன்னர் "அதிவீராமன்பட்டணம் செ. கபிபுமுகம்மது ஆலிம்சாகிபு"
ன்பவரால் செய்த "ஞானதீபசங்காரம்" என்றொரு புத்தகம் நம்பா
வைக்கு அகப்பட்டது.

அப்புத்தகத்தை யாம் பார்த்தபோது அதனை அவர் மிக்க உ
லாசமாகவும், நமது வேத கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும்
முவிரோதமாகவும், எவ்வாற்றானும் பொருந்தாத விபரீதார்த்தங்களு
அனாவிசயமான நியாயங்களும்; நிராதார வாக்கியங்களும், எழுத்து
சொல், பொருள், முதலிய இலக்கண வழுக்களும், நிறைத்து ஞான
சன்மார்க்க போதனைக்குமாறாக நோக்கபடி வரைந்திருப்பது மன்றி,
அவ்வாசிரியரை, "பலாசிபா" "முகுத்தசிலா" என்றும், 'எகூதி,' "நசாறா
க்கள்போல் என்றும், இன்னு மனேக கொடிய தோஷவாக்கியங்களை
அடுத் தடுத்துப் பலவிடத்தும பிரயோகித்துத் தம்புத்தகத்தை முழு
ம் வழுவாசகத்தால் முடித்திருக்கின்றார். இப்பாதகமிக்க சங்காரப

த்தகத்தை மறுமுறை பார்க்கவும் மனஞ் சகியாது முதுகுக்குப் பின்
னெறிந்துவிட்டு, அதைத் தீண்டியும் பாராதிருந்து விட்டோம்.

சங்காரம் என்னும்புத்தகம் அநேகர் பார்வைக்குக்கிடைத்தபின்
முஸ்லிம்களிற் சிலர்மனம்பொறாது நமதிடத்து நேரிலும் கடிதங்களா
லும், ஞானதீபாசிரியரோ, பலபாஷைகளைக் கற்றுத்தெளிந்தும் நமது
மார்க்க அறிவொழுக்கங்களிற் சிறந்தும், இவ்விலங்கையிற்பல கற்பனுச
மயிகள் மனுக்கூலைமேற்கொண்டு சிற் சிலபோது நம் மார்க்கத்தோடு
முரணுகின்றமையால், நம் மார்க்க நன்மைக்கும் முஸ்லீம்களின் சங்
கைக்குமாக "முஸ்லிம்நேசன்" என்னும் பத்திரிகையைப் பிறப்பித்து ஏ
ழுவருடக்காலம் அநேக உபந்நியாசங்களைப் பிரகடனஞ் செய்தும்,
அப்பால் "அறபு இல்மு" கற்குதற்பொருட்டுப் பல கித்தாபுகளை இய
றறி அதற்கு எத்தனையோ அரிய நன்முயற்சிகளை நடத்தி யிருப்பதும
ன்றி, இந்த ஞானதீபம் என்னும் பத்திரிகையைப் பிறப்பித்து நமது
மார்க்க அறிவுபோதனைகளையே, தெள்ளிதாய் விளக்கியும் வந்தாரன்
றோ! இவ்வாறுற்ற நமமார்க்க அபிவிர்த்திக்கான சற்பிரயத்தின முய
ற்சிகளிலேயே பெரும்பான்மையும் தம் வாழ்நாளைக் கழித்து உயர்ப
தவியைப் பூண்டவரும்; நம் தேசாதிபதியவர்கள் முதலிய அநேக க
னவான்களின் பட்சங்களைப் பெற்றுப் பெரும்புகழ் வகித்தவருமான
கனவானென்பதைச் சிறிதுமுணராது, அவரது நன் முயற்சிக் கி
டையூறாகவும், அவர்ப்பல தூஷண மாரிபொழிந்தும், தூர்ப்பலக்கருவி
கொண்டு செய்தசங்காரமென்னும் புத்தகத்திற்கு ஓர் மறுப்பெழுதி
வைப்பதே அத்தியாவசியகமெனமுறை யிட்டார்கள். அதற்குயாம்
எவ்வகைநீதி நியாயங்களைக்கொண்டு மறுப்பெழுதிவைத்தாலும், பொ
றுமை, அகங்காரமுங்குடிகொண்டமனத்தினர்கள் "இன்னுங்கெடுவே
ன், போடுபந்தயம்" என்றவனுக்கொப்ப இதற்கும் குறுக்கிடவேமுய
ல்வர். அச்சங்காரப்புத்தகமே வீண் அகங்காரத்தாற்செய்ததென மன
நீதியுள்ள எவருக்கும் விளங்கிக்கிடக்கின்றதே. அன்றியும் எமக்குறு
ம்வியாபாரமுதலிய தொல்லைகளோமிகுதம். எனப்பலவாறு கூறிமறு
த்தும் கேளாமல் அடுத்தடுத்துச் சொல்லித்தூண்டினமையால், சுருக்
கமான நியாயபிரமாணங்களைக்கொண்டு எளிதிற் புலப்படுமாறு "ஞான
தீபசங்காரம் வீண் அகங்காரம்" எனநாமகரணஞ்சூட்டி யிப்புத்தகத்
தை யொருபிரகாரம் எழுதிமுடித்தோம்.

எனது சகோதரர்களாகிய முஸ்லீம்களே!

ஞானதீபப்பத்திரிகை அடங்கலையும், சங்காரப்புத்தகத்தையும்
ஒருங்கேவைத்து, முதற் றொட்டுக் கடைவரையும் மனநீதியோடுபார்

இந்நூலைந்தெரிந்த இலங்கையின்கண் விசேஷநகரமாகிய "கண்டி" நகரில் வாசஞ்செய்யும், கனந்தங்கிய மரைக்காயர் முகம்மது காசிம்மரைக்காயரவர்களால் 1892ஆம் ஆண்டு ஜூலைமீ 1உ முதல மாதமொருமுறை, "ஞானதீபம்" எனு நாமகரணத்துடன் ஓர்பத்திரிகை பிரசுரிக்கப்பட்டுவந்தது. அது, இத்தேசத்திற் பரவிப்பட்டு வழங்குஞ் சமயங்களுள், சைவர், கிறிஸ்தவர், புத்தர், என்னுஞ்சமயகுருமார்களை, நமதுசமய ஆலிம்களோடு வைத்துச் சித்தசமாதான முடையோ ரேற்கத்தக்க பல நியாயப்பிரமாணங்களால், அவர்களுடைய மதாநுசாரங்களின் பேதாபேதங்களைக் காட்டி மறுத்து, நமது வேதமே யெவற்றினுஞ் சிறந்த மேன்மைநிலையுடையதும், பரிசுத்த சத்தியமுடையதுமென்பதுந் தோன்ற, பல திருஷ்டாந்தத்தோடு தெள்ளிதாய் விளக்கிவந்திருக்கின்றது. அன்றியும், பொறாமை அகங்காரமுதலிய துர்க்குணங்களை யொழித்து மனோநிர்மலராகிய பாக்கியவான்களுக்கு மேதுமாக்க அறிவைத் தீபம்போன்று விளக்குமென்பதற் கையமுமில்லை.

அப்பத்திரிகை வெளிப்பட்ட சில தினங்களுக்குப் பிறகு அதனை மறுத்து "முஸ்லிம் நேசன்" வழியாய்ச் சில வீண் குதர்க்கவாதக் கடிதங்கள் உலமா விருதுகளுடன் பிரசுரித்துவர நிமித்தம், ஞானதீபாசிரியர் தமது 3 ம. பத்திரிகைவாயிலாற் றக்க விடையுடன் சமாதான நியாயமுமளித்து, இனி, இவ்வித வீண்வாதத்தில் எனது பெருமதியான வாழ்நாளைக் கழியேன், உங்கள் தூஷணைத் தாலும் தர்க்கத்தாலும் எனது மகிமை குறைந்துபோகிற தில்லை, நான் கவனிக்கப்போகிறதுமில்லை, ஆதலால் இம்மட்டில் நிறுத்துகிறேன் என மௌனித்து விட்டார். அவர் கூற்றினையுணர உய்த்துணர்ந் தறியாதவழுக்காறுடையோரின் "பசாது" அடங்கியொழியுந் தருணத்துப் பின்னர் "அதிராம்பட்டணம் செ. சயிபுமுகம்மது ஆலிம்சாகிபு" என்பவராற் செய்த "ஞானதீபசங்காரம்" என்றொரு புத்தகம் நமபார்வைக்கு அகப்பட்டது.

அப்புத்தகத்தை யாம் பார்த்தபோது அதனை அவர் மிக்க உல்லாசமாகவும், நமது வேத கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் முழுவிரோதமாகவும், எவ்வாற்றானும் பொருந்தாத வியர்த்தார்த்தங்களும், அநாவசியமான நியாயங்களும்; விபரீத வாக்கியங்களும், எழுத்துச், சொல், பொருள், முதலிய இலக்கண வழுக்களும், நிறைந்து ஞானதீப சன்மார்க்க போதனைக்குமாறாக சேர்த்தபடி வரைந்திருப்பதுமன்றி; அவ்வாசிரியரை, "பலாசிபா" "முருத்ததசிலா" என்றும், 'எகூதி', 'நசாறு' க்கள்போல் என்றும், இன்னு மனேக கொடிய தோஷவாக்கியங்களை, அடுத்தடுத்துப் பலவிடத்தும் பிரயோகித்துத் தம்புத்தகத்தை முழுதும் வசைவாசகத்தாற் முடித்திருக்கின்றார் இப்பாதகரிக்க சங்காரப்பு

த்தகத்தை மறுமுறை பார்க்கவும் மனஞ் சகியாது முதுகுக்குப் பின்
னெறிந்துவிட்டு, அதைத் திரும்பவும் பாராதிருந்து விட்டோம்.

சங்காரம் என்னும் புத்தகம் அநேகர் பார்வைக்குக் கிடைத்தபின்
முஸ்லிம்களிற் சிலர் மனம்பொறாது நமக்கெழுதிய கடிதங்களா
லும், ஞானதீபாசிரியரோ, பலபாஷைகளைக் கற்றுத்தெளிந்தும் நமது
மார்க்க அறிவொழுக்கங்களிற் சிறந்தும், இவ்விலங்கையிற்பல கற்பனை
யிகள் மறுதலையைமேற்கொண்டு சிற் சிலபோது நம மார்க்கத்தோடு
முரணுகின்றமையால், நம் மார்க்க நன்மைக்கும் முஸ்லிம்களின் சங்
கைக்குமாக "முஸ்லிம்நேசன்" என்னும் பத்திரிகையைப் பிறப்பித்து ஏ
ழுவருடக்காலம் அநேக உபந்நியாசங்களைப் பிரகடனஞ் செய்தும்,
அப்பால் "அறபு இல்மு" கற்குட்பொருட்டுப் பல கிதாபுகளை இய
றிஅதற்கு எத்தனையோ அரிய நன்முயற்சிகளை நடத்தி யிருப்பதும
ன்றி, இந்த ஞானதீபம் என்னும் பத்திரிகையைப் பிறப்பித்து நமது
மார்க்க அறிவுபோதனைகளையே, தெள்ளிதாய் விளக்கியும் வந்தாரன்
றோ! இவ்வாறுற்ற நமமார்க்க அபிவிர்த்திக்கான சற்பிரயத்தின முய
ற்சிகளிலேயே பெரும்பான்மையும் தம வாழ்நாளைக் கழித்து உயர்ப
தவியைப் பூண்டவரும், நம தேசாதிபதியவர்கள் முதலிய அநேக க
னவான்களின் பட்சங்களைப் பெற்றுப பெரும்புகழ் வகித்தவருமான
கனவானென்பதைச் சிறிதுமுணராது, அவரது நன் முயற்சிக் கி
டையூறாகவும், அவரிற்பலதூஷணை மாரிபொழிந்தும், துர்ப்பலக்கருவி
கொண்டு செய்தசங்காரமென்னும் புத்தகத்திற்கு ஓர்மறுப்பெழுதி
வைப்பதே அத்தியாவசியகமெனமுறை யிட்டார்கள். அதற்குயாம்
எவ்வகைத்தி நியாயங்களைக்கொண்டு மறுப்பெழுதிவைத்தாலும், பொ
றாமை, அகங்காரமுங்குடிகொண்டமனத்தினர்கள் "இன்னுங்கெடுவே
ன், போடுபந்தயம்" என்றவனுக்கொப்ப இதற்கும் குறுக்கிடவேமுய
லவார். அச்சங்காரப்புத்தகமே வீண் அகங்காரத்தாற்செய்ததென மன
நீதியுள்ள எவருக்கும் விளங்கிக்கிடக்கின்றதே. அன்றியும் எமக்குறு
ம்வியாபாரமுதலிய தொல்லைகளாங்குதம். எனப்பலவாறு கூறிமறு
த்தும் கேளாமல் அடுத்தடுத்துச் சொல்லித்தூண்டினமையால், சுருக்
கமான நியாயபிரமாணங்களைக்கொண்டு எளிதிற் புலப்படுமாறு "ஞான
தீபசங்காரம் வீண் அகங்காரம்" எனநாமகரணஞ்சூட்டி யிப்புத்தகத்
தை பொருபிரகாரம் எழுதிமுடித்தோம்.

எனது சகோதரர்களாகிய முஸ்லீம்களே!

ஞானதீபப்பத்திரிகை அடங்கலையும், சங்காரப்புத்தகத்தையும்
ஒருங்கேவைத்து, முதற் றொட்டுக் கடைவரையும் மனநீதியோடுபார்

பட்டோனாயின், ஞானதீபாதிபரோடு இப்பசமயாசாரர் முரண எவ்வளவு மலிந்திருக்கின்றதென்பதும், அவரது சங்காரப்புத்தகம் அகங்காரத்தாற் றினைந்த நவமூலாசகத்திரட்டென்பதும், யாங்காட்டியவை இன்ன இன்ன காரணத்தாற்றக்க நியாயபோதனைதானென்பதும், நன்குபுலப்பட்டு இச் சங்காரப்புத்தகத்திற்கு நிராகரணமுமெழுத நமது முஸ்லிம்கள் எல்லோருங்கூடவேமாகவென்றுஞ் சொல்விக்கொள்வதற்கையமில்லை. ஆதலாற் சகோதரர்களே? ஞானதீபப்பத்திரிகைகள், சங்காரம், இப்பு த்தகம், ஆகிய இம்மூன்றனையும் நீங்களொவ்வொருவரும் சற்றுக்கிர்த கையுடன் பார்வையிட்டுத் தங்கள் தங்கள் மனதிற்குப் புலப்படுமெய்ப் பாவங்களை மனச்சாட்சியோடு தயைசெய்து விளக்கும்படி விரும் புகிறோம்.

"அழுக்காற்றினல்லவைசெய்யாரிழுக்காற்றி
னேதம்படுபாக்கறிந்து."

பிசுமில்லாஹி

# ஞானதீபசங்காரம்

# வின் அகங்காரம்.

---

## ஞானதீபம்.

தீபசம்ஹாரார் "1892ம் ௵ ஓகஸ்ட்டு மீ 1ந் தேதியில் ஞானதீபமென்று ஓர்பத்திரிகை வெளிவந்த விஷயங்களைப்பற்றியோசிக்க அதற்கு ஞானதீபமென்று பெயர்வரைந்தது குற்றம்" என்றும் "ஞானம் அதாவது அறிவு இந்த அறிவாவது நான்குவகைப்படும்" என்றும் திருவள்ளுவர் குறள்பரிமேலழகருரையாதிநூல்களிற் கிடந்தவைகளிற்றேடி நான்குதிருட்டாந்தங்களை வரையறுத்துக் கூறியிருக்கின்றார். அவர் கூற்றைமீண்டுச்சற்றேற பரியாலோசிப்பாம்.

தீபசம்ஹாரார்; ஞானமென்பதன் பதப்பொருளாகிய அறிவுக்கு அவர்காட்டியநான்கு இலக்கணந்தானெனத்தீர்மானித்தது, இந்து சாஸ்திர நூல்களுள் யாண்டுப்பெறப்பட்டது. அல்லதூஉம், இந்நான்கு இலக்கணமென வரையறை கூறிய நூலாசிரியர் யாவர்? திருவள்ளுவர்குறளுக்குச்செய்த விஷேட உரையிலேகிடந்த ஞானத்துக்கு இலக்கண அரிப்பரித்த அவரது கட்பார்வைக்கு அவ்வறத்துப் பாலிலே துறவறவியற்கு முன்னமே, ஞானவதிகாரத்தில் "ஞானமாவது வீடுபயக்குமுணர்வு" என்று ஆண்டு உரையாசிரியர்காட்டியவஃது புலப்பட்டிலது போலும். இதுபொழுதும் அதுகாண்பராயின், இனி ஞானத்திற்கு இலக்கணம் ஐந்து என்பர்போலும். ஆனால் இதுகாறும் தமிழ்ப்பாடையில் அமைதநூலாசிரியர்களால் எந்த நூல்களிலாவது ஞானமென்னும் அறிவுக்கு இலக்கண மித்தனையென வரையறுத்துக் கூறப்படாததற்கு, தீபசம்ஹாரார்தற்போது நூதன இலக்கணந்தீர்மானிக்கத் தோன்றிய மகாபண்டிதர்போலும்.

இதுவேயுமன்றி, தீபசம்ஹாரார் ஞானத்திற்குப்பின்; "தீபம்" என்றிருத்தலால் அத்தீபத்திற்கும் ஞானத்திற்குக் கூறிப்போந்தவாறே சிலதிருஷ்டாந்தங்களைத் தீர்மானித்துக் கூறியதோடொழியாது, அவரது அத்தீர்மானத்திற்கே "ஷைகுல் அக்பர் இபுனு அறபி" நாயகமவர்களின் இலட்சணவாக்கியங்களால்" "ஞானதீபமென்றும்' "ஞானதிருஷ்டி" என்றும் அறிவித்திருப்பதாயும் கூறுகின்றார்.

ஆ! இவ்வளவு அபவாதம் "ஷைகுல் அக்பர் இபுனு அரபீ" நாயகமவர்கள் மகத்துவமுடைய அப்பாலானைய அரிய கிரந்தங்களைப்பற்றி, அக்கிரந்தங்களுள் எழுதப்பட்ட பதங்களின் கருத்துக்களுக்கு எதிர்த்த; லோகத்தின் அனைவருமே, அவைகளைப்பாடையிலென்றோ! அவைத்து இலட்சணவாக்கியங்களாய் பதிவித்திருப்பார்கள். தீபசகோதரர் தாம் சொன்னபடி "ஞானதீபம்" என்னும் "ஞானதிருஷ்டி" யென்னும் வரைந்து அறிவித்திருக்க எந்தக் கிரந்தத்திற் கண்டாரோ! ஆச்சரியம்! அது அங்ஙனமாக.

கவனிப்பு.

ஞானம், என்பதற்கு அறிவு என்பது சாதாரண அர்த்தம். அது கடவுளாகிய பரம்பொருளுணர்வுக்குரியது. அங்ஙனமாயினும் அது வழக்கின்கண் இப்பிரபஞ்ச அறிவுக்கும் வழங்கப்படுகின்றது. "கல்வி ஞானம் அற்பமுமிலாதவனை வலைமுதிர்ச்செங்கையாய்முருக்கின் மணமிலாமலரென மதிப்பேன்" என்பன முதலியபலவழக்குகளிருப்பனவன்றியும், இத்தேசங்களிற்பலசமயிகளும், தத்தஞ்சமயக் கொள்கைகளையே மெய்ஞ்ஞானமென்றும், ஏனைய சமயக் கோள்களை அஞ்ஞானமென்றும், சாமானியவழக்காப்படாவிப்பதோடும் தீபம், பானு, சந்திரன், தாரகை, என்று பிரகாசத்திற்காய் அவரவர்களுக்குரிய பற்பல பிரபந்தநூல்களுக்கும் பத்திரிகைகளுக்குங் காரணச் சிறப்புப்பெயர் கொடுத்துப் பாவித்து வருகின்றார்களன்றோ? இங்ஙனமாயங்கள்போன்ற அநேகவியாயங்களும் பிரத்தியட்சமாய்ச்சொற்ப அறிவுள்ள குழந்தைகளுக்கும் அறியக்கிடக்கின்றனவே. இவ்வழக்குப்பற்றித்தான், ஞானதீபாசிரியர் தமது சுத்தசத்திய இஸ்லாமார்க்க அறிவுபோதனையாகிய தமிழ்ப்பாடைப்பத்திரிகைக்கு, ஞானதீபமென நாமஞ்சூட்டினர். இதைக்குற்றமென்பார்யாவர்? தீபசகோதரர்! நமது மார்க்க உபதேசங்களிற் சிலவற்றைத் தம் புத்திபோதவண்ணம் விவேகசூனியர்கள் மெச்சும்படி எழுதி அதற்கு "ஞானோதயதீப அலங்காரம்" என வெகுநீளங்கொண்ட நாமஞ்சாற்றியிருக்கின்றனரே! அதெங்ஙனமோ? ஞானமென்னும் அறிவுக்கு அவர்குறித்த நான்கு இலக்கணந்தானென்னும், தீபத்திற்குக்காட்டிய திருஷ்டாந்தங்களையும் வரைபறந்து அப்பாக்காலத்திற் சாற்றிய நாமமாயிருப்பினுமிருக்கும். ஒருக்கால் அக்குற்றத்திற்குஞ் சங்காரஞ்செய்யத்துணிவர் போலும் யவர். இவரின் விவேகசாதுரியம் வியக்கற்பாலதே! இனி, தீபசகோதரர் ஞானத்திற்கும் தீபத்திற்குங் காட்டிய திருஷ்டாந்தங்களுள் ஞானதீபப்பத்திரிகையில் ஓர் அணுவாவது இல்லையென்றும், அவ்வாசிரியரைப்பழித்தனை சொற்களைக்கொண்டு தூஷித்துபலவாறு தம்மனஞ் சென்றபடியே, பிதற்றியிருப்பன வற்றையெ

ல்லாம் ஆங்காங்கு முறைப்பே நிராகரிக்கிறார். இவ்விஷயத்தில் தீபசம்ஹாரர் காட்டிய போலிப்பாயங்களுக்குக் கொடுக்கத்தக்க நியாயங்களநேகமிருப்பினும், இச்சிறு புத்தகத்தி லவற்றையெல்லாம் விரிப்பிற்பெருகுமென்று நிறுத்தினோம்.

## ஞானதீபசங்கார மென்பது குற்றம்.

அதை மூன்றுவகையாகப் பிரித்திருக்கின்றோம்:—

முதலாவது.— ஞானதீபசங்காரமெனப்பெயர் சூட்டினது இலக்கணமறியாத வாசகமாயின் இது ஓர் மரபுவழு. எங்ஙனமெனில்; சங்காரம் என்பது படைமுதலிய கருவிகொண்டழிக்கும் அன்னவைபோல்வன சிலவற்றிற் கலைத்துவிளக்கவித்தற்குரியது. இது, கொசுவைச்சம்காரஞ் செய்தல், எறும்பைச் சம்காரஞ் செய்தல், பயிரைச் சம்காரஞ் செய்தல், என்னும் இவை போல் வனவற்றோடு இனஞ் சேர்ந்து. ஒதுக்கத்தக்கதொன்க.

இரண்டாவது.— ஞானதீபம், ஒரு புத்தகமாய் முடிந்துள்ளதன்று. அது மாதமொருமுறை பிரசுரிக்கப்பட்டது. முதலாம் பத்திரிகையின்கண் தீபசம்ஹாரர் தமது திரிவார்ச்சிக்கு மாறுப்பட்டன சிலவற்றைக் கண்டித்திருக்கின்றாரேயன்றி யேனைய அநேகப்பத்திரிகைகள் அவரது கண்டனத்துள்ளடைந்திலவாதலான் "ஞானதீபசங்காரம்" எனப்பெயர் சூட்டிக்கொண்டது, நியாய விரோதமான குற்றமே. இதனைக்கற்றோர் தாமதுகாற்கடைக்கொண்டொதுக்குவரென் புணர்க - ஒருக்கால் தீபசம்காரர் கண்டனமியற்று முன்னும், இப்பொழுதும், இயற்றியபின்னரும், பிரசரிக்கப்பட்டுள்ள ஞானதீபம், அத்தனையையும் ஒருங்கேகண்டிக்க அவரதுசங்காரநூலொன்றே போதுமெனச்சூட்டிக்கொண்ட பெயராகுமே! அங்ஙனமாயின் இவ்வழுவாசகத்திரட்டானது ஞானதீபாசிரியரிற்கொண்ட காயமொராக்கோட்டியால் அங்கிறந்து முக்காலத்துணர்வுபற்றிச்செய்த ஓர் அற்புதநூல் போலும்! இத்துர்வழக்கான நாமம் முழுமக்கள் களைந்து முன்வருமேயன்றி சாதுக்கள் சபையின் மணப்பெறாது.

மூன்றாவது.— அத்தியாவசியகங்கவனிக்கத் தக்கதாயிருக்கின்றது பாருங்கள் "ஞானம்" அதாவது, சரிகை, கிரிகை, யோகம், ஞானம், விகற்பமின்றி சேதபரம்பொருளாகிய கடவுளினது நித்தியானந்தபதவியை யருளும் சன்மார்க்க அறிவேயாம். "தீபம்" அதாவது அவ்வறிவால் துற்குணமாகிய தீய இருட்களைச் சிதைத்து சற்குணமென்னும் அகத்தினது பிரகாசமேயாம். இவ்வகையநேகமேன்மையும் விரிவும் அத்தாங்கமும் பொதிந்த ஞானதீபம் என்பது நமதுசுத்

தசத்திய இகலயமாக்க பெண்புத்தகைய யென்னே? இதுபற்றியுமன்றோ! ஞானதீபாசிரிய தமிழ்ப்பாஷையில் ஞானதீபம் எனனும் பெயர மைத்துப் பார்க்க அறிவுபோதனைக்கேற்ற ... கொண்டு அர்ரமக ரணமுந் குட்டிப் பிரசுரித்திருக்கிறார். ஆகையால ஆசாரிய பத்திரி கையை யீன்றிச் சங்கரஞ் செய்யத் துணிந்து யார்க்கத்தைச் சங்கரி க்க முயல்வதுபோலாகுமன்றோ? ஆ! ஆ! ... இப் பாதகவினைச் செய்யக்கொண்டிருக்கும் ... என்ன தண்ட னை விதிப்பீர்களோ? கல்வியறிவற்ற ... உலமாக் களே உங்களுக்கேபாரமாயிருக்கின்றது.

## கண்டி.

தீபசம்ஹாரர் "கண்டியென்பது அரைசாயிறுவார் இந்நூலைக் கண்டியென் று வாசிப்பவர்க்கே ... கண்டிக்கப்படவேண்டியதால் நம்பார்வைக்கு அவர் பே வினைதைக் கண்டிக்கவே துணிந்தோம். ஆதலால் அங்ஙனஞ் செய்யக் கோ ருகிறேனே" என்கின்றார்.

ஞானதீபமோ தீபசம்ஹாரரைசிப்பவைக் கெல்லாமென்றுகூறி யபடி பல நடமாத்திரம் பத்திரிகையாகவின் "கண்டியுங்கள்" எனப்பன் மையாயிருத்தலையென்பி. அங்ஙனமின்றி கண்டியென இருதினைப்பொ துவைப்பால் ஒருமைச் சொல்லாகவின், தீபசம்ஹாரர் கூற்றுப் பொருந் தாமைதான் உ. இனி, ஞானதீபாசிரியர் பொதுநயங் கருதி துற்குண மாதிய கெடுதிகளைக் கண்டிக்குஞ் சமயோசிதனைக் குறித்த பத்திரிகையாக லின், உள்ளில் அகங்காரமுதலான துர்க்குணங்கொண்டு பார்ப்பவர்க ளைக் கண்டியென ஞானதீபத்தை விளித்து ஏவியிருத்தலாய்க் கொள் ளுதல்வேண்டும்? நியாயம். இவ்வுணர்வினையற்ற தீபசம்ஹாரர் ஞானதீபாசிரிய ரினுமிகக் கற்றுத் தெளிந்த நுண்ணறிவாளர்போன்று, ஒருமை பன் மைதானுமறியாது கண்டனம்பெற்றத் துணிந்ததுங் கலிகாலக் கொடுமை தான். ஆக "தான்கிடப்பது குப்பைமேடு கனவுகாண்பது பச்சுமாளி கைபா."

## சலவாத்து.

தீபசம்ஹாரர், "ஞானதீபம் முதலாம் பக்கத்துட்பவுள் துதிக்குப்பின் சலவா த்தை யெழுதாவிட்டாரென்றும் ஞானதீபாசிரியர் எகூதிகசாருக்கள் புகழு ம் புகழாகப் புகழ்ந்து அவரின் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்தாரென்றும் இன்னபிறவிருத்தனுபவாதகஞ்" அமைத்துகின்றார்.

"சலவாத்தை" யெழுதாவிட்டவர்களெல்லாரும் எகூதிகசாருக்கள்

போல்வார்கள்தானோ? நமது மார்க்கக் கிரந்த கர்த்தர்களாகிய "முகன்னி
பின்" என்னும் நாயகங்களாற் பாடப்பட்ட அரிய கிரந்தங்களில்
'பிசுமில்' 'நமது' 'சலவாத்து'களைச் சுருக்கமாயெழுதாது விடப்பட்டிருக்
கின்றனவே. அவர்களே பல இடங்களினும் மேற்கோளாக எடுத்துக்
காட்டியிருக்கின்ற "செய்யிதினா சுல்தானுல் ஆரிபீன் இபுனு அத்தாஉல்லாகு"
நாயகம் அவர்களினது "கிக்கம்" என்னும் அரியகிரந்தத்திலும், பிசுமில, ந
மது சலவாத்துக்களையெழுதாது விடப்பட்டிருக்கின்றதே. பின்னு றிக்
லீகென்னும் நாயகங்களான் மிக்கதிபோடு 'ஷரகு' என்னும் வியாக்கி
யானஞ் செய்திருப்பனவற்றையிந்நாள்காறும் இவர் கண்டிலர்போலும்;
கண்டிருப்பவராயின் இவ்வளவு இடருழப்பமாட்டார். இனி, ஞானதீ
பாசிரியர் சலவாத்தை எழுதாதுவிட்டது அறிவின்மையாலாவது கன
க்குறைவாலெண்ணியாவது விட்டவரல்லர். அங்ஙனமாயின், அவராலி
யற்றப்பட்டுள்ள "கிதாயத்துல்காசிமிய்யா" முதலிய கித்தாபுகளில் மிக்
க நியதியோடும் தெளிவோடும் எழுதவேண்டியதேது என்னை? முதலா
ம்பத்திரிகையில் "சலவாத்து" எழுதாவிட்ட காரணமென்னெனில், இத்
தேசவாசிகளாகிய சைவர், கிறிஸ்தவர், புத்தாதிய சமயத்தவர்களின்
குருமார்களை நமது மார்க்க ஆலிம்சாகிபுமாரோடு வைத்து, சமாதானத்து
டன் ஒவ்வொருவருடைய கொள்கைகளையுஞ் சீர்தூக்கிச் சல்லாபஞ்
செய்யுமிடத்து, நமது முஸ்லிமீன்களின் [illegible] விசுவாசத்திற்குரிய ச
லவாத்தை அவ்விடம் எழுதுவது முறையன்றென்பனென்க. முஸ்லீ
ங்களே பாருங்கள் [மக்கம் பத்கா வதற்கு இரண்டு வருடத்திற்கு முன்
னர் மக்கிகளுக்கும் மதனிகளுக்குமிடையில் பிறப்பித்துக் கொண்ட
சுல்குநாமாபத்திரம் "கலரத் அலி புல்முர்தலா றளியல்லாகு" அன்கு அ
வர்களால் வரையப்பட்டுள்ளது. அதில் அல்லாவுடைய றசூல், அப்து
ல்லாஉடைய மகன் முகம்மது, எனக்காணப்பட்ட வாக்கியத்தில் "சகு
ல்" என்பவர் அதில் அருமையைமேற்கொண்டு றசூலென்னு நாமத்தை
நாம் இருகட்சியாரும் சமாதானத்துடன் வரைந்துகொண்ட இப்பத்திர
த்திற்காண்பது முறையன்றென மறுக்க, உடனே நமது இரட்சகநபிபெ
ருமானவர்கள் அப்பத்திரத்தைவாங்கி றசூலென்ற சொல்லையாத்திரம்
தங்கள் திருக்கரத்தால் அழித்துவிடவில்லையா?] அன்றியும், ஞானதீ
பாசிரியர் அங்ஙனம் எழுதுவதை விடுத்தாலும் தமது வாயால் மொழி
ந்தே துவங்கியிருப்பாரென்பதற் கையமென்னை? இவைபோன்ற அதி
பிரபல்ய நியாய ஒழுங்குகளையும் நமதுமார்க்க 'இலமு'களிலிருப்பனவற்
றையும், ஞானதீபத்தில் ஓதியுணரும் ஆற்றலின்றி நமது இரட்சகநபி
பெருமானவர்களது திருவாக்கியங்களைச் சென்னிமேற்கொண்டவரு
ம், அப்பெருமானுருடைய கிருபாகடாட்சத்திற் குரியவருமாய், இவ்வி
லங்கைமாநகரின் கண்ணே நமதுமார்க்க நன்மையும் பொதுநன்மையு

தசத்திய இசுலாமாக்க மென்பதற்கைய மென்னே? இதுபற்றியுமன்றோ! ஞானதீபாசிரியர் தமிழ்ப்பாஷையில் ஞானதீபம் என்னும் பெயர் நமது மார்க்க அறிவுபோதனைக்கே உரியதெனக் கொண்டு அந்நாமகரணமுஞ் சூட்டிப் பிரசுரித்திருக்கின்றார். ஆதலால் அந்நாமப் பத்திரிகையை மீண்டுஞ் சங்காரஞ் செய்யத்துணிந்தது மார்க்கத்தைச் சங்கரிக்க முயல்வதுபோலாகுமன்றோ? ஆ! ஆ! (நவுதுபில்லாஹிமின்ஹா) இப்பாதகவினைமேற் கொண்டொழுகும் தீபசம்ஹாரருக்கு என்ன தண்டனை விதிப்பீர்களோ? கல்வியறிவாற்சிறந்த சிரோமணிகளான உலமாக்களை உங்களுக்கே பாரப்படுத்துகின்றோம்.

## கண்டி.

தீபசம்ஹாரர் "கண்டியென்பது அரூராயினும் இந்நூலைக் கண்டியென்று வாசிப்பவர்க்கெல்லாம் கண்டிக்க யேலுமாதால் நம்பார்வைக்கு அவர் யேவினதைக் கண்டிக்கவே துணிந்தோம். ஆதலால் அங்கீகாரஞ் செய்யக் கோருகிறேன்" என்கின்றார்.

ஞானதீபமோ! தீபசம்ஹாரர்வாசிப்பவருக் கெல்லாமென்றுகூறியபடி பலரும்பார்க்கும் பத்திரிகையாகலின் "கண்டியுங்கள்" எனப்பன்மையாயிருத்தல்வேண்டும். அங்ஙனமின்றி கண்டிஎன இருதிணைப்பொதுமைப்பால் ஒருமைச் சொல்லாகலின், தீபசம்ஹாரர் கூற்றுப் பொருந்தாமைகாண்க. இனி, ஞானதீபாசிரியர் பொதுநயங் கருதி துற்குணமாதிய கெடுதிகளைக் கண்டிக்குஞ் சற்போதனைக்குரிய பத்திரிகையாகலின், உள்ளில் அகங்காரமுதலான துற்குணங்கொண்டு பார்ப்பவர்களைக் கண்டியென ஞானதீபத்தை விளித்து ஏவியிருத்தலாய்க் கொள்வதன்றோ? நியாயம். இவ்வுணர்வின்றித் தீபசம்ஹாரர் ஞானதீபாசிரியரினு மிகக் கற்றுத் தெளிந்த நுண்ணறிவாளர்போன்று, ஒருமை பன்மைதானுமறியாது கண்டனமியற்றத் துணிந்ததுங் கலிகாலக் கொடுமைதான். ஆக "தான்கிடப்பது குப்பைமேடு கனவுகாண்பது பச்சமாளிகையா."

## சலவாத்து.

தீபசம்ஹாரர், "ஞானதீபம் முதலாம் பக்கத்துள் துதிக்குப்பின் சலவாத்தையெழுதாவிட்டாரென்றும் ஞானதீபாசிரியர் எகூதிநசாறாக்கள் புகழும் புகழாகப் புகழ்ந்து அவரின் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்தாரென்றும் இன்னபிறவித்தனுபவாதகஞ்" சுமத்துகின்றார்.

"சலவாத்தை"யெழுதாவிட்டவர்களெல்லாரும் எகூதிநசாறாக்கள்

போல்வார்கள்தானே? நமது மார்க்கக் கிரந்த கர்த்தர்களாகிய "முகன்னிபீன்"கள் என்னும் நாயகங்களால் இயற்றப்பட்ட பல அரிய கிரந்தங்களில் 'பிசுமில்' 'கம்து' 'சலவாத்து'க்களைச் சுத்தமாயெழுதாது விடப்பட்டிருக்கின்றனவே. அவர்களாமே பலவிடங்களினு மேற்கோளாக வெடுத்துக் காட்டியிருக்கின்ற "செய்யிதினா தாசுல் ஆரிபீன் இபுனு அத்தாஉல்லாகு" நாயகம் அவர்களினது "ஹிக்கம்" என்னும் அரியகிரந்தத்திலும், பிசுமில, கம்து, சலவாத்துக்களையெழுதாது விடப்பட்டிருக்கின்றனவே. பின்ஷாறிகீனென்னும் நாயகங்களான் மிக்கதுதியோடு 'ஷறகு' என்னும் வியாக்கியானஞ் செய்திருப்பனவற்றை யிந்நாள்காறும் இவர் கண்டிலர்போலும்; கண்டிருப்பவராயின் இவ்வளவு இடருழப்பமாட்டார். இனி, ஞானதீபாசிரியர் சலவாத்தை எழுதாதுவிட்டது அறிவின்மையாலாவது கனக்குறைவாயெண்ணியாவது விட்டவரல்லர். அங்ஙனமாயின், அவரால் இயற்றப்பட்டுள்ள "கிதாயத்துல்காசிம்யா" முதலிய கிதாபுகளில் மிக்கதுதியோடும் தெளிவோடும் எழுதவேண்டியதேது என்னை? முதலாம்பத்திரிகையில் "சலவாத்து" எழுதாவிட்ட காரணமென்னெனில், இத்தேசவாசிகளாகிய சைவர், கிறிஸ்தவர், புத்தராதிய சமயத்தவர்களின் குருமார்களை நமது மார்க்க ஆலிம்சாகிபுமாரோடு வைத்து, சமாதானத்துடன் ஒவ்வொருவருடைய கொள்கைகளையுஞ் சீர்தூக்கிச் சல்லாபஞ் செய்யுமிடத்து, நமது முஸ்லிமீன்களின் பரிசுத்த விசுவாசத்திற்குரிய சலவாத்தை அவ்விடம் எழுதுவது முறையன்றென்பதேயென்க. முஸ்லிங்களே! பாருங்கள் [மக்கம் பத்கானதற்கு இரண்டுவருடத்திற்கு முன்னர் மக்கிகளுக்கும் மதனிகளுக்கு மிடையில் பிறப்பித்துக் கொண்ட சுல்குநாமாபத்திரம் "கலரத்அலி புல்முர்த்தலா றளியல்லாகு" அன்கு அவர்களால் வரையப்பட்டுள்ளது. அதில் அல்லாவுடைய றசூல், அப்துல்லாவுடைய மகன் முகம்மது, எனக்காணப்பட்ட வாக்கியத்தில் "சகுல்" என்பவர் அதில் அசூயைமேற்கொண்டு றசூலென்னு நாமத்தை நாம் இருகட்சியாரும் சமாதானத்துடன் வரைந்துகொண்ட இப்பத்திரத்திற்காண்பது முறையன்றென மறுக்க, உடனே நமது இரட்சகநபிபெருமானாரவர்கள் அப்பத்திரத்தைவாங்கி றசூலென்ற சொல்லைமாத்திரம் தங்கள் திருக்கரத்தால் அழித்துவிடவில்லையா?] அன்றியும், ஞானதீபாசிரியர் அங்ஙனம் எழுதுவதை விடுத்தாலும் தமது வாயால் மொழிந்தே துவங்கியிருப்பாரென்பதற் கையமென்னை? இவைபோன்ற அதிபிரபல்ய நியாய ஒழுங்குகளையும் நமது மார்க்க 'இலமு'களிலிருப்பனவற்றையும், ஞானதீபத்தில் ஓதியுணரும் ஆற்றலின்றி நமது இரட்சகநபி பெருமானாரவர்களது திருவாக்கியங்களைச் சென்னிமேற்கொண்டவரும், அப்பெருமானாருடைய கிருபாகடாட்சத்திற் குரியவருமாய், இவ்விலங்கைமாநகரின் கண்ணே நமதுமார்க்க நன்மையும் பொதுநன்மையு

ங்கருதிப் பலபத்திரிகைகளியற்றியும், எமது சற்சமய அறிவையூட்டும் பொருட்டு அநேக உபந்நியாசங்களைச் செய்தும், அரபுஇலமு கற்குரானுக்காக்களுக் கனுகூலமா நம் பொருட்டுச் சலித்தாபுகளை யியற்றியுமுள்ள இவையேபோன்ற இன்னும் அநேக நன் முயற்சிகளினுங் கைவிட்டு நடத்திவருவதனால் கீர்த்திப்பிரபோன்று மட்டுக்கெங்கணும் பெரும்புகழ்வகித்தவராகிய மாட்சிமை தங்கிய ஞானதீபாசிரியரை "எகூதி" 'நசாறா"க்களைப்போலென்று குறிப்பிக்கெதிராக்கித் தீபசம்ஹாரர் தமதுநாத்தழும்பேறத் தூஷித்துவாளாப்பக்கங்களை நிரப்பியிருக்கின்றார்.

ஒரு முஸ்லிமை மற்றொரு முஸ்லிம் குபிருக் குடன்படுத்திப் பேசுகிறதனால் அவ்வா றன்னை யிய மதம்பட்டுடன்படுத்தவேண்டுமென்பதைத் தீபசம்ஹாரருக் குணர்ந்துவாரின்றி வாளாப்போந்தாரே ஆ! பரிதாபமே!

"அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத்
தயுழியுய்த்துவிடும்"

குறுஆன் ஆயத்து.

தீபசம்ஹாரர் "[குர்ஆனுல்மஜீதுபுர்க்கானுல்ஹமீது]என்னும் நாயனுடைய திருவாக்கியங்களை வேறுபாடையமால் மொழிபெயர்ப்பதன்றி அவ்வட்சரங்களால் எழுதுவது குற்றம்" என்கின்றார்.

நமது பரிசுத்த[குறுஆன்] வேதவாக்கியங்களை பிறபாஷையட்சரங்களால் வரைதல் கூடுங் கூடாதெனுமொழி யிருதிறனிலேனுமெப்பின் கூடாதென்பது சரியாயினும், ஞானதீபாசிரியர் எழுதுவது கூடுமென்ற ஓர்பூர்வரையைத் தீர்மானித்தவரல்லர். இத்தேசத்தில், அநேக உலமாக்களால் இயற்றப்பட்டுள்ள தமிழ்ப்பாடை புத்தகங்களில் சிற்சிலவாக்கியங்களை யெழுதியிருப்பதுபோல, ஞானதீபாசிரியரும்எழுதியிருக்கின்றார். அவ்வுலமாக்களோ பார்க்க நன்மைக்காகத் தாங்கள் தாங்கள் எடுத்தகோரிக்கை நிறைவேறும்பொருட்டு, காலம், இடம்,சமயங்கருதி நேரிடுஞ் சங்கடத்திற்காக கிலாபைத் தொடர்ந்து எழுதியிருப்பதாகக் காணப்படுகின்றது. இவற்றைப் பொதுநயங்கருதிச் செய்தார்களென்னும் நியாயத்தைச் சித்தசமாதானத்தோடு சிந்தித்தேனும் உய்த்துணராது, ஞானதீபாசிரியர்மீது குற்றஞ் சுமத்தி நிந்தித்திருக்கின்றாரே. இவ்விதமான துட்ப குற்றங்கள் அணுவேனுமணுகாது பேணுந் தகையினராய் மார்க்கச் சட்டங்களின் கரைகண்டு வெளிவந்த தீபசம்ஹாரர் தம்மாலியற்றிய தமிழ்ப்பாடை புத்தகங்களிலெல்லாம் "பிசுமில்" என்னும் வாக்கியத்தை நிரப்பமாக எழுதியிருப்பதன்றி வேறுமிவராலியற்றப்பட்ட "நபகாத்துல் இஃகுவான் மின்தருஜமத்துல்குர்ஆன்" என்னுந்தமிழ்ப்பாடை புத்தகத்திலும் அந்த குர்த்து

முதலாம் ஆயத்தையும், அப்புத்தகம் 11ம் பக்க(                    ) என்ற வாக்கியத்தையும் மிக்க தெளிவோடு இட்டிருக்கின்றாரே?

இன்னும் திபசம்ஹாரர், [   ][   ] இவ்வட்சரங்களை புணர்ந்தால் [   ] என்ற பதத்தைத் தரும். இது முன் சொல்லிய ஓர் வசனத்தை உறுதிப்படுத்த மொழிமுதல்வரும் எழுத்தாம். இதைத் தமிழால் உச்சரிக்கவேணும் அப்படி உச்சத்தால விருதாவாகிவிடும், அனேக வித்திரமும் பகர்கின்றாரே.

திபசம்ஹாரர் தமது மேற்படி புத்தகத்தில் (   ) (   ) (   ) முதலிய வட்சரங்களைத் தமிழட்சரங்களினால் வரைந்து புணர்த்தி யிருக்கின்றாரே? அதென்னவோ? அவற்றைத் தமிழில் உச்சரிக்கும்போது அவர்கருத்தின்படி பொருள் எவ்வளவோ! பேதகமாகிவிடுமென்பதை யிவருங் குணர்ந்தவரில்லைப் போலும். அந்தோ இப்படியும் மதிகெட்டுத் தடுமாறுகிறுண்டா! அங்ஙனமாக,

திபசம்ஹாரர் "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையாரில்" என்றும் "அறிவுள்ள விபரீதபோதகனை நேசிப்பதிலும் அறிவற்ற நீதிபோதகனை நேசிப்பது உனக்கு நன்மையைத்தரும் என்றுரைக்கும் வாக்கியத்தையும்" "ஞானதிபாசிரியருக்கு பணிநோய் பிடிக்க அந்நோய் தீர்க்கும் பண்டிதரைப் ஔசதம் கொடுப்பதற்கு ஆயுள்வேதமுறைப்படியே யவற்றால் போதிக்கின்றோம்" என்றும் "எகூதிகள் தவுறாத்தை நிகுந்தோதி யதன்படி நில்லாமல் எப்படி மாறுயினார்களோ அவ்வாறே ஞானதிபாசிரியரும் மாறுகிறார்" என்றுமுள்ள இன்னும் பிற சில உதாரணபவாத தோஷவாக்கியங்களையெடுத்து ஞானதிபாசிரியருக் குடன்படுத்திப் போகதார்.

திபசம்ஹாரர் அவர்தாபே [திறு ஆன்] வேதவாக்கியத்தை தமிழ்ப்பாடைப்பட்சரங்களால் முன்னர் வரைந்து உடனே மறுவியுற்று ஞானதீபாசிரியர்மீது அது குற்றமெனக் குறித்தமையானும், சன்மார்க்கவாக்கியம் பொதிந்த ஞானதீபத்திற்கு மாறாக திபசம்ஹாரர் விபரீதபோதனை புரிந்தமையானும், ஒரு முஸ்லிமை மனநோவப்பண்ணுதலே பெரும் பாவமென்ற அறிவும் அவருக் கிருக்க நிரபராதியாகிய ஞானதிபாசிரியரை எகூதிகளாருக்கள் முதலாயின குபிரர்களுக் குடன்படுத்தினமையானும், ஒரு முஸ்லிமைக் குபிருக் குடன்படுத்திப் பேசினுற் பேசிய அவனே யதற்குரியனென்னுஞ் சட்டவாக்கிய மலிந்துகிடக்கின்றமையானும், முறைமேப திபசம்ஹாரர் காட்டிய உதாரண முழுமையும் எவ்வாற்றானும் அவர்தலைக்கே சூட்டிவைப்பது, ஆன்றோர் கடமையென்பது காண்க.

## கவனிப்பு.

“இக்கம்” என்னும் அரிபகிரந்தத்தில் ஸ்ரீபசம்ஹாரர் எடுத்தெழுதிய வாக்கியத்தின் பொருளாவது, ‘தன் நட்பைப் பெருமைகண்ட அறிவுள்ளவனை நேசிப்பதினும் தன் நட்பைத் தாழ்மைகண்ட அறிவற்றவனை நேசிப்பது உனக்கு நன்மையைத்தரும்’ என்பதாம். அவர் “நீதிபோதகன்” “விபரீதபோதகன்” என விபரீதார்த்தப் பண்ண இப்பெயர்ச் சொற்கள் அப்பதங்களுள் யாண்டுமெவற்றிற் றிருப்பக் கண்டுபிடித்தாரோ? ஆச்சரியம். அருவாக்கியங்களுக்கு உரைவிரிப்பதிலும் ஸ்ரீபசம்ஹாரர் பக்காப்பேர்வழிபோலும்.

## பலவேதங்கள்.

ஸ்ரீபசம்ஹாரர் “உலகத்திற் பற்பல வேதங்களிருக்கின்றன ஒவ்வொருவேதமும் நப்ஸின் கெடுதிகளை மாற்றுதற்குரிய சட்டங்களடங்கினதாக இருக்கும் என ஞானதிபாசிரியர் கூறியது மார்க்கவிரோதமுண்டாவதினால் கண்டிக்கலானேன்” என்கின்றார்.

மார்க்கவிரோதமென்னையோ? ஸ்ரீபசம்ஹாரர் சுத்தத்திற்கு மாறங் குற்றங்களும் உலகில் விளங்கிவருகின்ற இயல்பின் ஹக்கீக்கத்தை யறியாரோ? இத்தேசத்திற் பற்பல வேதங்களென விளங்குங் கொள்கைக்காரர் தத்தஞ் சமயக் கோள்களையே திறமென்றும் பாராட்டிவருகின்றார்களென்பதை யாவரறியாத விஷயம். ஆயினும், அம்மதானுசாரச் சட்டங்கள் உண்மையானவையல்ல. நமது வேதப்பிரமாணமே யெவற்றினுமிகச் சிறந்திருக்கின்றது என்னுங் கருத்துத் தோன்ற ஞானதிபாசிரியர் நன்கு தெள்ளிதாய்க் கூறியிருக்கின்றாரேயன்றி ஸ்ரீபசம்ஹாரருப்தனைருந்திறமின்றித் தமதபூக்காற்றுக்கிலக்காய்ப் புரட்டிப் பிரசங்குழப்பியதுபோல், ஞானதிபாசிரியர் சொல்லவில்லை. அப்பத்திரிகையை யெடுத்துப்பார்க்குஞ் சமாதானக் கல்விமான்களுக்குஞ் சரியென விளங்காமற் போகா.

இனியிவ்வென்றையே வாயைச் சுட்டுவிட்டதேயென்று மல்லுக்குப் போவான் சிலமாய்க் குற்றம்பிடித்துக் கண்டிக்கப் புகுந்த கல்விமான் இவரது சங்காரப் புத்தகம் 11ம் பக்கம்: “உலகத்தில் பெரும்பாலும் ஒவ்வொருமதஸ்தர்களும் எவற்றை நன்குணர்ந்து நீதிஞாயங்களைத் தெரிந்து அவரவர்களின் கொள்கையை விர்த்திசெய்ய விரும்பி நடக்கும் அறிவுப்பேரறிவாம்” என்கின்றாரே. இஃதென்ன புத்தியாம். இக்கூற்றன்றோ மார்க்கவிரோதம். இவரதுமதியைக் குசைநுனியினுங் கூர்ந்தமதியென்னலாம். இத்தவிஷயத்தில் ஞானதிபாசிரியருக்குடன்படுத்தி யெழுதியிருக்கும் வாசகமுழுமையும் சம்ஹாரர் சலக்கேயினமாய்க் கண்டித்திற்றிலே அச்சங்காரபுத்தகத்தை வாசிக்கும்போதி

வாளர்கள் நன்குமதித்துக் கொள்வர். ஆகலால் சிறப்புற்ற கல்விமான்களே! தீபசம்ஹாரர் மதிகெட்டு வரைந்த நிந்தனைவாசகமுற்றும் அவர்தலையையே! சூழ்ந்துநிற்கின்றமையால் இவ்விஷயத்தில், ஞானதீபாசிரியருக் குடன்படுத்திய ஊழல் மிக்க உவமானங்களனைத்தும் அவர்மீதே வைத்துச் சுமத்தி "செய்ததீவினை செய்தவர்க் கெய்திடும்" "பழிப்பவர் பழிப்புக்குரியவரலது பழிக்குப் பொருளலவாமால்" என்னு முதுமொழிவாக்கியங்களை நன்கோதுவித்து அவரஞ்சி யடங்குவான் செய்வீர்களாக.

## இஉக்கிலு.

தீபசம்ஹாரர், "ஞானதீபர் கிறிஸ்தவர்களைப்போல் தனது யுத்தியால் அவரின் ஞானதீப மூன்றாம் பிரதியில் 22ம் இலக்கத்தில் இரண்டாம் வரியில [இ உ கி லு] என்று எழுதியிருக்கின்றார். இதன் பொருள் "அக்லைக் கொண்டு யோசியுங்கள்" என்று சொல்லியிருக்கிறது என்று எழுதிய வாசகம் குறு ஆனில் வரவில்லை,, என்கின்றார்.

நமது பரிசுத்த(கு று ஆ ன்)வேதத்தில் அக்லைக்கொண்டு யோசித் துணர்வாறுள்ள அநேக வாக்கியங்கள் வந்திருக்கின்றவாகலானது பற்றி ஞானதீபாசிரியர் தமிழ்ப்பாடையி லவ்வாக்கியங்களை யெடுத்தோருதாகரணத்திற்காக ஒன்றை பொறித்துணர்த்து வித்தார். ஆகையால், அங்ஙனம் "கு று ஆ னில் இல்லையேயில்லை"யென்றும் அதுபிழை யல்லது சுத்தமென்றுகூதல், தீபசம்ஹாரர் என்ன அவசியங் கருதி வழக்கிடப் புகுந்தார். அங்ஙனம் புகுந் தழக்கு மதியீனர் ஞானதீபரின் கருத்தின் திறனறியும் வன்மையின்றி விகாரக் கருத்தினராய் அவர் "குபிரில்விஷயமாயிற்றோ" எனவுமல்லோ, உளறுகின்றார். ஆ! இதென்ன மதிகேடு!! தீபசம்ஹாரர், "ப சா து" என்னு மந்தகாரத்தினால் காணவுணர்வு தடுமாறி தம்மைத் தாமே வாளாக் குபிரிலாழ்த்திக்கொண்டாரே! பரிதாபம்!! இனி, இவற்றைநன் குய்த் துணர்ந்து மீட்சியென்னும் 'தௌபா' நிலையிற் பிரவேசித் தொல்கி யொழுகி யிருப்பக் கடவர்ன்றாயின், பிரமாணவாசிரியரவைக்கேற்றி முழுத் தண்டனையும் பெறுத்துவிப்பா மென்பது காண்க.

## பறுவகுடை ஆலம்.

தீபசம்ஹாரர், "பறுஸகுடைய ஆலத்திற் பலவித விலங்கினத்தின் சூரத்தைப்போல் இன்சானுடைய சூரத்தை மாற்றித் தெண்டனை விதிக்கப் படுமென்று ஞானதீபத்தில் சொல்லியவாசகம் "குறுஆனுக்கு விரோதம்" எனகின்றார்.

ஞானதீபாசிரியர், "நமது ஆகு பருளைகுடை அலக்கிலாகி விடும் போது நாம எந்த மிருகத்தின் குணங்கொண்டிருக்கிறோமோ அம்மிருகத்தின் ரூபமெடுத்து ஊழிகாலம யாதனைபடுவோம" என்றும இதற்கு "நபிபெருமானாரவர்களுடைய கதீதும்" "இமாம் அப்துல்கரீமஜீலீரகுமதுல்லா" "இபுனு அறபிநாயக முதலான பெரியோர்களுடைய திருவாக்கியங்களும் ஒத்து" உதாரணப்பட்டிருக்கின்றதென்றும், தெள்ளிதாயக் கூறியிருக்கின்றாரே யன்றி தீபசம்ஹாரர் கூற்றைப்போல்ஆதாரமின்றி வாளாக் கூறவில்லை. இதற்குச் சிறிதும் பந்தமின்றிய குறு ஆன் சூரத்திற் சில வாக்கியத்தின் பொருள்களையுந் தீபசம்ஹாரர் எழுதிப் பின்னர் என்னென்னவோவெல்லாம் பிதற்றி வழிந்தவையில் தக்க ஆதாரமும் ஒழுங்குமின்மையால் நபிபெருமானாரவர்களுடைய கதீதையும் குறு ஆன் கிதாபு முதலிய சுலோகபிரமாண நூல்களின் முடிபுகளை வுரைபறக் கற்றுத் தேர்ந்து தெளிந்த பரிசுத்தமகான்களாகிய, "இமாம் அப்துல்கரீம்ஜீலீ" "முகியதீனிபுனு அறபிறலியல்லாகுஅன்குமா" முதலான நாயகங்களின் திருவாசகங்களையும், குறு ஆனுக்கு விரோதமென்பதுதான் அவர் கருத்துப் போலும் [நவூது பில்லாகி மின்கா]

"கல்லாதானொட்பங்கழியநன்றாயினு
கொள்ளாரறிவுடையார்"

## ஈமான்.

தீபசம்ஹாரர் ஈமான் இயல்பு ஆறுவிதிகளின் பிரிவுகளையும், சுருதி, யுக்தி, அநுபோகங்களுக்கு முழுவிரோதமாகத் தமது ஆபாசமதியாற் சோடித்து மேற்கோள் காட்டுகின்றார். இது, ஞானதீபாசிரியர் ஈமானைப்பற்றிக் கூறியிருப்பனவற்றை மறுத்தற் பொருட்டு அவர் தெரிந்துகொண்ட போலிநியாயங்களெனப் புலப்படுகின்றது. அந்நியாயங்களை! ஞானதீபாசிரியர் ஈமானையும் அக்லையும் பற்றிக் கூறியிருப்பனவற்றை நிராகரிக்க அல்லது பேதகப்படுத்த ஒருவாற்றானும் பொருந்தாத வாக்கியமெனக் கண்டாலும் சாமானியர்கண்டு பயங்கா வண்ணம் ஈண்டு ஞானதீபாசிரியர் தமது முதலாம் பத்திரிகையிற் கூறியவற்றை முன்னரே யெடுத்துக் காட்டிப் பின்னர் அதனை வேதப் பிரமாணங்களால் திருட்டாந்தப் படுத்துகின்றேம்.

"ஞானதீபம்" முதலாம் பத்திரிகையில் ஈமானை மூன்றுவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது.—முதலாவது தக்லீதுடைய ஈமான் அதாவது தாய், தகப்பன், உஸ்தாது முதலியவர்களுடைய சொல்லையேற்று யாதொரு அத்தாட்சிகளில்லாமல் விசுவாசங் கொள்வது.

இந்த ஈமான் கூடுங் கூடாதென்று இமாம்களுக்குள்ளே தர்க்கமுண்டாகி பெலமான சொற்படி கூடும். இரண்டாவது.—இஃதியாருடைய ஈமான், அதாவது. நமமுடைய அக்லைக் கொண்டு அத்தாட்சிகளைத் தேடி யத்னில் திட்டமாக்கிக் கொள்கிறது இது உறுதியான ஈமான். மூன்றாவது.—தன் நப்சு சுத்தமாகி திரைகள் நீங்கப்பட்டு கஷ்பைக்கொண்டிருக்கிற ஈமான். இது ஆரிபீன்கள் அவுலியாக்கள் குதுபுமார்கள் நபிமார்களாகியவர்களின் ஈமானாகஇருக்குமென்றும "ஈமானை" உறுதிகொள்ளுதற்கு குறு ஆன் கதீது முதலியமார்க்கச் சட்டங்களை அக்லைக்கொண்டாராய்ந்து எக்கீன் கொள்ளவேண்டுமென்றும், நப்சின் கெடுதிகளை நோட்டமிட்டுக் கண்டித்து "அமல்" என்னும் வணக்கத்தைப் பிரயோகித்துக் கொள்ளல் வேண்டுமென்றும், அதிபிரபல நியாயங்களைக் கொண்டு நமது மார்க்க போதனை செய்திருக்கின்றார்.

## பிரமாணம்.

இவ்வாறே நமது பரிசுத்த சுன்னத்துஜமா அத்து போதகாசிரியர்களின் * அநேக அரிய கிரந்தங்களெல்லாம் ஒருங்கே ஒலமிடுகின்றனவே. இதற்குப் பிரமாணமாக அல்லாகுத்த ஆலா (குறு ஆன் ஷரீபில்) "அகப்பார்வை யுடையவர்களே ஆராய்ந்து உறுதிபெறுங்கள்" என்றும், "முகம்மதே வானங்களிலும் பூமியுலும் ஏதுண்டாயிருக்கிறதென்று நோட்டமிடுங்களென்று சொலலும்" என்றும், "அவர்கள் தங்களிலேயே யோசித்தறிய வேண்டாமா?" என்றும், "உங்கள் நப்சுகளிலேயே நீங்கள் பார்க்கவில்லையோ" என்றும் பல இடங்களிலுந் திருவுளம்பற்றியிருக்கின்றான். இன்னும் நமது இரட்சக நபிபெருமானாரவர்களின் திருவாக்கியம (ஹதீது)களில், "ஒருஷா அத்துநேரம் ஆராய்கிறது ஆயிரவருடம் "அமல்" செய்வதினும் ஏற்றமென்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். ஆகலால், "அல்லாகுத்த ஆலா" அவனதுவேதங்களையும், அவ்வேதச் சட்டங்களையும ஆராய்ந்து அறிந்து உறுதிகொள்ளுதற்கும், நப்சின் கெடுதிகளைக் கண்டித்து "அமல்" என்னும் வணக்கத்தைப் பிரயோகித்து, அவனது பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுதற்கும் நம்மனோர்க்கெல்லாம் "அக்லே" இன்றியமையா ஆதாரமாகத் தந்திருப்பதனால், அவ்வக்லின் சிறப்பையும் அதின "ஹகீக்கத்தை"யும்பற்

* இஹ்யாஉலூமுத்தீன், இன்சானுல்காமில், புத்தூஹாத்துல் மக்கியா } ஹிக்கம், சநூசி } பலாக்கியத்து, லத்தாயிபுல்மனன்

நிப் போரப்படுகின்ற நமது மார்க்க அரியகிரந்தங்கள் பலவாரிருப்பினும், "இமாம்கல்ஸாலிறகு மகுல்லாகி அலைகி" நாயகம் அவர்களின் "இகியாஉலூமுத்தின்" என்னும் பரிசுத்த கிரந்தத்தில் நின்றும் சில "ஹதீது"களை பின்பு பொழிப்புரையாக விளக்கிக்காட்டுவோம்.

## ஹதீது.

"ஆயிஷா றலியல்லாகு அன்காவைத் தொட்டும் வந்திருக்கின்றது. றஸூல்லா உடைய றசூலே! மனுதர் எதைக்கொண்டு வருசைபெறுவார்களென்று கேட்க "அக்லை"க்கொண்டென்றார்கள். ஆகிறத்தில் எதைக்கொண்டென்ன "அக்லை"க்கொண்டுதானென்றார்கள். அதற்கு அவர்கள் அமலைக்கொண்டல்லவா பிரதி செய்யப்படுவதென்ன, ஆயிஷாவே? அக்லில்நின்றும் அல்லாகுத்தாஆலா கொடுத்தமட்டிலன்றி "அமல்" செய்வார்களோ? "அக்லில்,,நின்றுங்கொடுத்தமட்டிலுமே "அமல்,, செய்யப்படும். "அமல்" செய்த தமட்டிற்குமே! பிரதிசெய்யப்படுவார்கள். என்றும் இன்னும் "இபுனு அப்பாஸ்றலியல்லாகு அன்கு"வைத் தொட்டும் வந்திருக்கின்றது, நபி நாயகம் திருவுளமானார்கள். ஒரு வஸ்தடங்களுக்கும் ஏனமுந் தங்கிப்புமுண்டு "மூமின்,,களுக்கு ஏனமுந் தங்கிப்பும் "அக்லா" யிருக்கும். ஒவ்வொருவஸ்துக்கும் ஏறுவாகன முண்டும், மனிதருடைய ஏறுவாகனம் "அக்லா"யிருக்கும். ஒவ்வொரு கவும்களுக்குத் தீர்மான முண்டும், அடியாருடைய தீர்மானம் "அக்லா,, யிருக்கும். ஒவ்வொரு கவும்களுக்கும் மேய்ப்போனுண்டும், வணக்கவாளிகளை மேய்ப்பது "அக்லா,, இருக்கும். ஒவ்வொரு வியாபாரிகளுக்கும் சரக்குச் சாமானுண்டும், முத்தகீன்களினுடைய சரக்குச் சாமான்கள் "அக்லா" இருக்கும். ஒவ்வொரு வீடுடையவர்களுக்கும், கிலாபடுண்டும் சித்திகீன்களுடைய வீட்டின்கிலைபார்ப்பாவது, "அக்லா,,யிருக்கும். அழிந்துபோன வடங்களுக்கும் பரிபாலனமுண்டும், நாட்டாமக்களைப் பரிபாலிப்பது "அக்லா,, யிருக்கும். ஒவ்வொரு மனிதருக்கும் வங்கிஷத்தையுங் கீர்த்தியையும் விளக்குவிக்கும் பிள்ளைகளுண்டும், சித்திகீன் களுக்கு வங்கிஷத்தையுங் கீர்த்தியையும் விளக்குவது "அக்லா" யிருக்கும் என்றார்கள். இன்னும், "சகீதிப்னுமுசையபு,,வைத்தொட்டும் வந்திருக்கின்றது "உமறு, உபையிபுனுக்குப்பு, அபூகுறைறு றலியல்லாகுஅன்குமா, இம்மூன்று பேரும் நபிநாயகமிடம் வந்து நாயகமே! மனிதரில் அதிகம் அறிந்தவனும், வணக்கமுள்ளவனும், வரிசையுள்ளவனும், யாவன்? என்ன, "அகுல்,,உடையவனென்றார்கள். இன்னும் அல்லாகுத்த ஆலா யிடம் மலக்குகள் ஆண்டவனே? அறுஷை விடவலுப்பமான வஸ்துவைப்ப

டைத்திருக்கின்றாபோவென்று கேட்க, ஆம் அது "அகுல்" என்றான் இவ்வண்ணமாக அநேகம் "ஹதீது,,களைக்கொண்டு தாட்சிப்படுத்தி, அல்லாஹுத்தஆலாவால் மனிதருக்குக் கைமாறு கருதாமற் கொடுக்கப்பட்ட யாவற்றுள்ளும் "அக்லை"ச்சிரேட்டமுடையதெனப் போதனை செய்திருக்கின்றார்கள்.

## எச்சரிக்கை.

இத்தியாதி காரணங்களினாலும் இன்னும் இவைபோன்ற அதிபிரபலபியாயங்களினாலும், ஞானதீபாசிரியரது போதனைகளொருங்கே, நமது சுன்னத்து ஜமாஅத்துகளுக்கு நிலைபேறுயுரியவையெனச் சிறுவருக்குந் தெள்ளிதாயறியக் கிடக்கின்றன. இப்போதனைகளையொருவன் விபரீதார்த்தம் பண்ணி நிராகரிக்கப் புகுவனேல், அவன் நமது மார்க்கசுன்னத்து ஜமா அத்துச் சட்ட ஒழுங்கோடு முழுதும் முரணி யிடர்ப்படுவனென்பதைத்தீபசம்ஹாரர் கிஞ்சித்தேனு முணராது ஞானதீபாசிரியரிற் கொண்ட அழுக்காற்றினால் மலினமடைந்த மனத்தினராய் குதர்க்க வீண்வாதம்பற்றி அவிவேகத்தால் இடருழக்கிப்போந்த அவரது ஊழலிற் சிலவற்றைப் பிண்டமாக எடுத்துச் சமாதானக் கல்விமான்கள் பார்வைக்காக இதனடியிற் காட்டுவாம்.

தீபசம்ஹாரர், "ஈமான் உண்டாகிறதில்லை விவேக அநுஷ்டானம் முயற்சியால் எவ்வகை முயற்சி செய்வதற்குக் காரணம் உண்டாகிறதெல்லாம் எஜமானுடைய நாட்டப்படியே அல்லாது புத்தி என்னும் ஆன்மாவின் பலத்தினால் அல்ல" என்கின்றார்.

அல்லாஹுத்தஆலாவினது தக்தீறையே பற்றுக்கோடாக்கொண்டு தீபசம்ஹாரர் இடர்ப்படுவது காண்க. சர்வாதிவிஷயங்களுக்கும் "அல்லாஹுத்தஆலா"வே முதற்காரணனென்பதூஉம், யாவும் அவனது நாட்டப்படியே நடக்கின்றனவென்பதூஉம், அவனன்றியோரணுவுமசையாதென்பதுமான ஆப்த வாக்கியங்கள் ஞானதீபாசிரியர் அறியா விஷயமாமோ! அல்லதூஉம், ஈமானையும் மார்க்கச் சட்டங்களையும் "அக்லை" க்கொண்டாராய்ந்து "ஏகீனில்" திட்டமாக்கிக்கொள்ளவேண்டுமெனச் செய்த போதனைக்கு, இஃதுமோர் மறுப்பாமோ! தீபசம்ஹாரர், ஞானதீபாசிரியரிற் கொண்ட காய்மகாரத்தால் அவர் "அக்லையே ஆதிபீடமாகவும், அதுவே சர்வ நிவர்த்திக்குங் காரணமாகவும், விபரீதபோதனை செய்தார்" எனத் தமது கோணற்புத்தியால் வருவித்து நிரோதுவாக அவரை "பலாசிபா,, முகுத்சிலா,, என்று தூஷித்துக் குற்றஞ் சுமத்தி மறுத்துவிட்டு, மூஸ்லீ மகனு

க்கு சன்மதி கற்பிக்கப் புகுந்த அவர் நமது சுன்னத்துஜமா அத்துக் ளின் கொள்கைக்குமாருகச் சர்வ விஷயங்களும் "அல்லாகுத்த ஆலா,,வினது "தக்தீ" ருகிய நாட்டமென்று வழி சறுகிப்போன "ஜபரியா,,க்களின் கொள்கையைத் தமக் குடன்படுத்திக் கொண்டாரே! இவரது புத்தியின் ஆபாசம் இருந்தவாறென்னே? பரிதாபம்! பரிதாபம்!! பண்டிதசிரோமணிகளே? நமது மார்க்கச் சட்டமாதிய விதிவிலக்கை "அக்லே" க்கொண்டாராய்ந்து "அமல்,, என்னும் வணக்கத்தைப் பிரயோகித்துவருதல் நமது கடமையேயன்றி "அல்லாகுத்தஆலா,,வுடைய நாட்டத்தைப் பற்றிச் சிந்தித்தல், அதைப்பற்றி வாதித்தல், தவறென்றும், அங்ஙனஞ் செய்யப் புகுமிவான் "ஜாகிலும்,, "ஷைத்தானைத்தொடர்ந்தவனும்,, "முப்த்ததிகு,, என்றும பலவாறு நமது வேதபோதகாசிரியரிர்களின் அரிய கிரந்தங்க ளெல்லாம் இழித்துக் கூறுகின்றனவே! இவற்றைத் தீபசம்ஹாரர், ஒருசிறிதும் ஓராது இங்ஙனம் ஆபாச சாகரத்தில் அமிழ்ந்துகிடப்பதை விட்டு மீட்சிபெறத்தக்க சன்மதி யூட்டுவீர்களாக.

தீபசம்ஹாரர் ,,குறுஆன் ஆயத்தின்பொருள் உம்முடைய நாயனுடினல் உலகத்திலுள்ள சகலரும் ஈமான் கொள்வார்கள்" என்னும் வாக்கியத்தையுமன்றோ இதற்குப் பிரமாணங்காட்டி மகிழ்கின்றார்.

ஆகா! ஞானதீபாசிரியர் ஈமானைப்பற்றி மார்க்க கட்டளையான போதனை செய்தவற்றைத் தீபசம்ஹாரர் இவ்வாக்கியத்தைக் கொண்டு நிராகரிக்கப் புகுந்த விவேகசூனியத்தைப் பாருங்கள். அவ்வாக்கியத்தின்படி "ஈமானில்" அழைத்தலாதிய மார்க்கபோதனைகளைத் தவறென்றும், இனி ஈமான் கொள்ளாது வீணுப்போனவர்களை யெல்லாம் நாயன் நாடவில்லை. அவர்கள் சுத்தவான்களெனவுந் தீர்ப்பிட்டெழுதவுந் துணிவான்றோ! ஆ'! (ஸூதுபில்லாகிமின்கா) இன்னும் தீபசம்ஹாரரின் புத்தி சாதுரியத்தை நோக்குமிடத்து; ஓரறிஞர் மற்றவர்களை விளித்து உங்கள் புத்தியைக் கொண்டு நமது மார்க்கச் சட்டங்களையும், நன்மை தீமைகளையும பகுத்தறிந்து நலவழியிலொழுகுவீர்களாகவென்று போதிக்குமிடத்து, போம்! போம்!! நன்மையுந் தீமையும் நாயனுடைய கற்பனையென்றே. நமது ஈமான் ஆருவது விதியாகலின், நன்மைதீமையாதிய விஷயங்கள் நாயனில்கின்றுநடப்பதேயன்றி நமதுபுத்தியா லாவதொன்றுமில்லையென மலைலுக்குப்போம் மூடனை நிகர்த்தன்றோ காணப்படுகின்றது. இன்னும் அல்லாகுத்தஆலா [குறுஆன்ஷரீபில்] நமது நபிபெருமானுரை விளித்து "நீர் உகந்தவரைத்திடனுக நேர் வழிகாட்டமாட்டீர் என்கினும் அல்லா நாடியவர்களை நேர் வழிகாட்டுவோன்,, என்னும் வாக்கியத்தைக் கொண்டு தீபசம்

ஹாபர் ஒருபோது, இரட்சக நபிபெருமானருக் குரிய நேர்வழி காட்டியென்னும (ஹாதி) என்ற "இசுமை" மறுக்கவுந் துணிவரோ வினர். கிற்க, நமது பரிசுத்த "குறுஆனஷரீபின்,, ஒவ்வொருவாக்கியங்களும் நபிபெருமானரவர்கள் மூலமாய், காலம், நேரம், இடம், சம்பவங்களைக் கொண் டருளப்பட்டதும்(ஷறகத்துநஸ்ஸு)(தலாலத்துநஸ்ஸு) (இஷாறத்துநஸ்ஸு) (கிஞயத்துநஸ்ஸு) (உமூம்) (குசூஸ்) (அக்ஸாம்) (அஜிஸா) (நாசிகு) (மன்சூகு) (ஆயாத்துல் முதஷாபகா) இவைபோன்ற அநேகவகைப் பொருட் புதைவுகளான அரும்பதங்களை யுடையதுமாம. இம்மகத்துவஞ் சிறந்த சுலோகங்களை, உசூலியூன்க ளென்னும் நாயகங்கள் அரிய கிரந்தங்களாக ஆங்காங்கு வேண்டியவண்ணம் பகுத்து, நுக்தும் களைத் தீர்மானித்து வியாக்கியானஞ் செய்திருக்கின்றார்கள். இக்கிரந்தங்களைக் கற்றுத் தெளியாத ஆபாசத்தினால் குறுஆன்ஷரீபின் தன்மையையும் அவ்வாக்கியங்களைப் பிரயோகிக்கும் வாக்க ஒழுங்கின் முறைகளையும் ஓராது, 'குரங்கின்கைப் பூமாலைபோல்" மனஞ்சென்றபடி சிதைத்து "அரங்கின்றிவட்டாடியற்றேநிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல்,, என்னும் குறள்வாகியத்திற் கிலக்காப் வானா வரைந் திருக்கின்றார். ஆதலால் கல்வியிற் சிறந்த சிரோமணிகளே! தீபசமஹாராருக்கு மார்க்கநூலறிந் தொழுகி நடக்கத்தக்க சற்புத்தி வருத்துவீர்களாக.

தீபசம்ஹாரார் "நான் பருத்தேன், இளைத்தேன், கண்டேன், இருந்தேன், புசித்தேன், கொடுத்தேன், போனேன், செய்தேன், என்று சொல்லுஞ் சாட்சிகள் யாவும், புத்திக்கி யிணங்கினதாக விளங்கினும், மூலாதார நூல்களின் ஒழுங்குக்கு விரோதம். எனென்றால் ஜீவன், நாட்டம், அறிவு, தத்துவம், பார்வை, கேள்வி, சுவாசம்; பேச்சு இவைகளெல்லாம் அடிமைகளுக்குச் சுதந்தரமுடையதல்ல" என்கின்றார்.

இஃதுமோர் புதுமைதான் "பத்தா இது பூலோகமா" என்றுகேட்டவன் போல் தீபசம்ஹாரார், நூதனமாக இக்கல்வியை யெங்ஙனந் தான் கற்று வெளிவந்தாரோ! *ஆச்சரியம். இருக்கட்டும் மனம், வாக்குக், காயம் ஆகிய முப்பொறிகளால் விளையும் நன்மை தீமையாதியவெச் செய்கைக்கும் அடிமைகள் சுதந்தரரல்லவரோ? இப்படியும் விபரீதமாற்றம் புகல்வாருண்டா! நாயன் அடிமைஎன்றும் நன்மை தீமை என்றும், பகுத்துப் போதிக்கும் வேதநூன்முறைகளைக் கற்று அவ்வழியின் "ஹகீக்கத்தை" யுணர்ந்து மூலாதார முடிபுளின்மேற் பாய்ந்து விபரீதபோதனைகளை உபந்நியாசித்தாரே! ஆனால் தீபசம்ஹாரார் 'தக்தீர்" ஆகிய நாயனது நாட்டமென்னும் ஆப்தவாக்கியங்களையும் எச்செய்கையும் அடிமைகளுக்குச் சுதந்தரமுடைத்தன் றெனத்தோ

ன்றுவனவற்றையும் பற்றுக்கோடாய்க் கொண்டு, ஞானதீபாசிரியரது விசிட்டபோதனைகளை நிராகரிக்கப் போந்த அவரது புத்தியின்நெறியை நோக்குமிடத்து, இத்தேசத்திற் சில மூடசிகாமணிகள் நமது மார்க்க நூன்முறைகளைக் கற்றுத் தெளிந்து அவற்றின் உண்மையையறியாமலும் சில ஞானவாக்கியங்களைப் பாடமிட்டுக் கொண்டு அம்முடிபுகளறியாமலும், மனஞ் சென்றபடியே விபரீதார்த்தம் படைத்துக் கொண்டு "ஷைகு" என்னும் பட்டஞ் சூட்டிப் பொய்வேடந்தரித்து உலகையலைப்பி மௌட்டீகமுடைய ஆண்பெண்களுக்குத் தீட்சையளிப்பதாக எல்லாம் "அல்லாகுத்தஆலா" வினது நாட்டமும் அவனது செய்கையுமேயன்றி அடிமைகளாகிய நமக்கு யாதிஞ் சுதந்தரமில்லையெனப் போதித்துத் தொழுகை, நோன்பு, முதலிய "அமல்" களைக்கெடுத்து "ஷைத்தா,,னைக் கலைத்துத் திரிகின்ற அவ்வதப்பினரிற் சேர்பவன்றோ காணப்படுகின்றது. ஆ!! (நவூதுபில்லாகிமின்ஷறிஷைத்தான்).

தீபசம்ஹாரர் "மலக்குகளென்னுந் தேவர்கள் சிருட்டிகளால் ஆண் பெண் அலி யிவைமுதலிய உருவடிவுகளில்லாமல் அவனுடைய அடிமைகளென்றும், அவர்களிற் சிலர் நம்முடனிருந்து நமக்குரிய விபத்துகளைக் காத்துவருகிறதாய் "குர்ஆன்ஷரீபின்,, திருஷ்டாந்தங்களால் அறிந்து நபிகளின் வாக்கிய உறுதிகளால் நம்புகிறோம்' இந்த நம்பிக்கை அகுலைக்கொண்டாராய்ந்துணரும்போது அவர்களின் கோலம் உருவம்முதலிய ஸ்தூலம் கண்காட்சிக் கெதிரே யிருக்கவேண்டுமே, என்கின்றார்.

ஞானதீபாசிரியர் போதனையை மறுக்கத் தீபசம்ஹாரர், தெரிந்துகொண்ட விபரீத வீண் நியாயத்தை, கனந்தங்கிய கல்விமான்களே! கவனிப்பீர்களாக. நமது "ஈமான்,, இரண்டாம்விதியின்படி "மலாயிக்கத்து,, களென்னுந் தேவதூதர்கள் ஆண் பெண் அலி யிவைமுதலிய உருவடிவுகளில்லாத அரூபிகளான சிருட்டிகளென்றும், அவர்களிற் சிலரின் பெயர், நிலைமை, தொழில்கள் இன்னவை என்றும், அதைக்கொண்டு குர்ஆன்ஷரீபின் திருஷ்டாந்தங்களையும் நபிகளின் வாக்கிய உறுதிகளையும் எகீன் கொண்டு நம்புங் கடமையேயல்லாது, அவர்களின் கோலம் உருவம் முதலிய ஸ்தூலம் இல்லாததைக் கண்காட்சிக் கெதிரே யிருக்கவேண்டுமேயென வேதகட்டளையோடு முரணிப் போதிப்பவனும், யோசிக்கத் துணியுங் கோணர்புத்திக்காரனும், யாவன்? ஆனால் "அகுலை" க்கொண்டு வேதகட்டளைகளையறிந்து தெளியாதவனே! அங்ஙனமாறாய் அரூபியான தேவர்களுக்குக் கோலம் உருவம் முதலிய ஸ்தூலம் கண்காட்சிக் கெதிரே யிருக்கவேண்டுமேயெனப் போதிக்கத்துணிந் திடர்ப்படுவனெனக் கொள்க.

தீபசம்ஹாரர் "கட்புலத்திற் கெதிரிட்ட பதார்த்தங்களின்உருவத்தைக் கண்டு அவற்றுள்ளிருக்கும் குணங்களை, சுவை, ஓசை, கந்தம் மெய் இவைகளாற் றெரிந் துணரும்படி ஆன்மாவை நமக்கோர் ஆயுதமாகக் கொடுத்த சர்வ இரட்சக நாயகனை அவனுல் அனுப்பப் பட்ட வேதங்களைக்கொண் டறியலாமே யல்லாது அகுலைக்கொண் டறிவது ஐயம்,, என்கின்றார்.

பரம்பொருட் கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட "அகுலை" க்கொண்டே அவனது வேதத்தையும் அவ்வேத ஒழுங்காய்ச் சென்று அவனையும் அறியலாமேயன்றி யியலாவாம். அக்கின்றி வேதப்பொருட்களைத் தாமுமறிவ தெங்ஙனம். பரம கர்த்தாவாகிய நாயன் பஞ்ச அறிவை விலங்கினங்களுக்குத் தாமுங் கொடுத்து அவற்றோடு பகுத்தறிவென்ற விசேடணப்பொருளாகிய அகிலறிவை நமக்குத்தந்து அதை வேதாராய்ச்சிக் காதாரமாகவும், வேதத்தை யதற் காதாரமாகவுந் தந்திருக்கிருனென்னும் வேதபோதனைகளையும், அதன் சிற்றுகளையும் தீபசம்ஹாரர் கற்றுத்தெளியாமலும், அகுல் வேறு ஆன்மா வேறென்ற விதற்பமறியாமலும், "அகுல என்னும் ஆன்மா" "புத்தி என்னும் ஆன்மா"வெனப் பலவிடத்துங் கூறுகின்றார். அகுலும் ஆன்மாவும் ஒன்றெனக் கற்பித்துவைத்த அவரது ஆசிரியர்,யாரோ! கற்றோர்கடாவுக.

தீபசம்ஹாரர் "செய்யிதிறு இபுனு அத்தாஉல்லாகுல் இஸ்கந்தரிய்யிறஹிமஹுல்லாகு அன்கு" அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய "ஹிக்கம்" அதாவது "ஈமான்" என்னுந் தீபஜோதி றகுமானுடைய நாட்டத்திலிருந்து முரீதுகளின் கல்புகளிலே ரகசியபொருளாய் உதயஞ்செய்யும் அற்புதஜோதி இந்தப்பாக்கியம் பெற்றுக்கொள்ளு முரீது எகீனென்னும் உறுதியே காரணம் அகுல் இவற்றுட் கலந்து சம்பாஷிக்கவேண்டியதில்லை. ஆகையால் புத்திமான் கவனிக்கவேண்டியது,,என்கின்றார்.

புத்திமான்கள் கவனியுங்களேன்? "ஈமான்"என்னுஞ் சோதி றகுமானுடைய நாட்டத்திலிருந்து இதயத்திலுதயஞ் செய்யும் அற்புதசோதிதான். அதற்கு 'எகீன்" என்னும் உறுதியே காரணந்தான். இவ்வளவுந்தேடித் தீபசம்ஹாரர் தமக் குபயோகிக்க அறிந்தவர், "எகீன" என்னும் உறுதிக்கு "அகுலே" காரணமெனக் கற்றுங் கேட்டுமறியாது "எகீன் என்னும் உறுதியோடு அகுல் கலந்து சம்பாஷிக்கவேண்டியதில்லை,, என ஈண்டு அகுலை மறுத்துப்போந்த விவேகசாதுரியம் மிக வியக்கற்பாலதன்றோ? இங்ஙனமாக "ஹிக்கம்' என்னும் அரிய கிரந்த இலட்சணவாக்கியங்களுள், தீபசம்ஹாரரின் கூற்றுப்போன்ற வாக்கியங்களாக ஓரிடத்துங் காணப்பட வில்லை. அதன் "ஷறகு,, என்னும் வியாக்கியானங்களிலாதல் காணகலாமெ

ன்றாலும், தீபசம்ஹாரரின் ஒழுங்கற்ற வழுவாசகத்திற் கண்டுகொள்வதும் பெரிய தொல்லை. ஆதலின் இவ்வரிய கிரந்தத்திற புகுந்திடருழக்கிய அவரது வழுவை முன்னருங் காட்டினமையால் ஈண்டும் விரிக்கிற்பல்குமென இப்பட்டியில் விடுகின்றோம். "கல்லாதவொருவன்றகைமைதலைப்பெய்து சொல்லாடச்சோர்வுபெறும்" என்பது காண்க. இது நிற்க,

தீபசம்ஹாரர், "ஞானதீபாசிரியர் தக்லீதுடைய ஈமானைப் பேசுகண்டு அதற் கையுமுண்டாக்கி முஸ்லீங்களைச் சந்தேகத்திலாக்கி விட்டார்" என்கின்றார்.

ஞானதீபாசிரியர் "தக்லீ"துடைய ஈமான் பெலமான சொற்படிக் கூடுமென்றே சற்போதனை செய்திருக்கின்றாரென்பது நீதியையுடைய கல்விமான்கள் அறியாவிஷயமல்ல. அது அங்ஙனமாக; "தக்லீதுடைய ஈமானைப்பற்றிப் பலவாறுகூறப்படும், அரிய பெரிய அறபிப்பாட்டை கிரந்தங்களைத் தீபசம்ஹாரர் பார்த்தறியா விட்டாலும் இத்தேசத்தில் வழங்கும் அறபுத் தமிழ்உரைக் கித்தாபுகளுள் கனந்தங்கிய நாகூரிபுனு அப்துல்காதிறு ஆலிம்சாகிபு அவர்களாலியற்றப்பட்ட (துஹ்பத்துல்கிராம்) என்ற கித்தாபின் 103ம் பக்கத்தில் "முகல்லிதுடைய ஈமான் ஸிகத்தென்று மிகுந்த கிலாபுவந்திருக்கின்றது. அநேகர் ஸிகத்தென்றும் அநேகர் ஸிகத்தல்லவென்றும் சொல்கின்றார்கள். ஸிகத்தில்லையென்ற சொற்படி முகல்லிது காபிராயிருக்கும், ஆகையால் குபிரைவிட்டும் கலாசு பெறுவதற்குக் கூடிய மட்டில் தலீல்களைப் படித்து ஈமானைப் பத்திரப்படுத்துவது மூமினானவன்பேரில் விதியாயிருக்கும்" என்று கூறியிருக்கின்றார்களே! இதற்கு யாதுசொல்லத் துணிவரோ வீணர்.

தீபசம்ஹாரர் "நமது சுன்னத்துஜமாஅத்தை யுடைய அஷ்அரிய்யி" "மாத்துரிதிய்யி இவர்கள் சக்கிரோதயத்தை "தக்லீது"க்கு நிகராக்கிச் சொல்லியதற்கு இவர் எழுதிய போலிவாசகம் இணங்காதது பற்றியே! ஆகவே இவர்வாசகம் மடமையென்யறிக" என்கின்றார்.

ஞானதீபாசிரியர் தமது முதலாம் பத்திரிகையில் தக்லீதுடைய ஈமானுக்கும் இஃதியாருடைய ஈமானுக்குமுள்ள வித்தியாசத்திற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறோம் என அவ்வுதாரணங் கூறினரேயன்றி தக்லீதுடைய ஈமானுக்கு இஃது உதாரணமென்று கூறிலரே? அதாவது நம் முஸ்லீம்களுக்கு முதற் சொல்லைத் தொடர்ந்து ஒட்டிக்கொள்ளுதலான தக்லீதுடைய ஈமானோடிருத்தல் சிறுபிள்ளை

யின்றன்மை, அங்ஙனமில்லாது பராயமுடையவர் போன்று ந
மது அகுலைக்கொண்டு மார்க்கச் சட்டங்களை யாராய்ந் தறிந்து
உறுதி பெற்றுக்கொள்ளல் வேண்டுமென வற்சாகம் வருத்துமாறு
சிறுவனுக்கும் பராயமுடையவனுக்கு முள்ள தன்மையைக் கொ
ண்டு சாதாரணமாகக் கூறினார். இவற்றிற்கும், முதற் சொல்லை
த் தொடாது ஒப்புக் கொள்ளுதலான தக்லீதுக்குச் சந்திரோ
தயத்தை நிகராக்கிக் கூறிய வற்றிற்கும், எங்ஙனம் பிணங்குமோ!
கல்வியறிவிற்சிறந்த சிரோமணிகளே? தீபசம்ஹாரர் ஞானதீபாசி
ரியரின் கல்வியறிவின் திடத்தையும் அவரது விவேகசாதுரியத்தின்
மகிமையையும் விளங்கி யுய்த்துணருந் திறனில்லாய் அவரது போத
னையைக் கண்டிக்க அச்சமின்றி வெளிவந்து அடிக்கடி தூஷித்திக
ழ்வது" பைத்தியம் தீர்ந்தது உலக்கையெட்டா கோவணங்கட்டு"
என்றவனை நிகர்த்தன்றோ காணப்படுகின்றது. ஆ! விபரீதமே!!

"அழுக்கற்றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாருமில்,,

## ஓ! எனதுபிறவிகளாகிய முஸ்லிம்நேசசிரோமணிகளே!

சருவசிருட்டிகருத்தாவாகிய அல்லாகுத்தஆலாதனது எவ்வகைச் சி
ருட்டிகளுள்ளும் மனுவை யுயர்வாகப் படைத்து வேதப்பிரமாண முதலிய ஒ
ழுங்குகளைப் பிரித்தறிதற்பொருட்டு அக்லையே முதற்காரணமாகக் கொடுத்
துநமது இரட்சக நபிபெருமானாரவர்களை யெல்லா நபிகளுள்ளும் சிரேஷ்ட
ராய்ப் பிறப்பித்து நம்மனோரடங்கலும் பேரானந்த முத்திமோட்சம் பெறுத
ற்கு மகத்துவந்தங்கிய "புறுகான்,, என்னும் வேதத்தையும் அந்நபிபெருமா
னாரவர்களுக் கருளினான். அவ்வேதத்தையும் பெருமானாரவர்களின் திருவா
க்கியங்களையும் நன்குணர்ந்து முப் பொறிகளானும் வழிபாடுற்று அனு
ப்பிரமாணமும் வரம்பிகவாதொழுகிய மகாந்த நிபுணர்களான பரிசுத்த
நாயகங்கள் "குறுஆன், ஹதீது, இஜ்மாகு, கியாசு,, என நான்கு உசூலி
ல் மார்க்கக் கட்டளைகளைப் பகுத்தும் வகுத்தும் நமது சுன்னத்துஜமாஅத்
தென்னும் நேர்வழியை ஸ்தாபித்தார்கள். அவ்வழிபொருந்திய முஸ்லிம்பி
றவிகளாகிய நாம் ஒவ்வொருவரும் அக்லைக்கொண் டாராய்ந்து வேதகட்ட
ளை முதலிய 'இல்மு,களை நன்குதெளிந் துறுதிபெற்று நப்சின் கெடுதிகளை
க்களைந்து நல்வணக்கத்திற் பிரயோகித்து அனந்த மோட்சானந்தம் பெறுவ
தே கடமை.

இவ்வாறுற்ற ஞானதீபசற்போதகாசிரியரோடு. தீபசம்ஹாரர் எவ்வ
ளவும் சம்பந்தமின்றியே முரணியும் அவர்போதனைக்கு மறுப்பாக ஆ

ண்டவனது காட்டமென்னும் அத்தியந்த பரம ரகசியத்தையும் கிராந்த வாக்கியங்களையும் உபயோகமற்ற உதாரணங்களையும் பிரயோகித்து, வேத கட்டளைக்குமாறு யவற்றின் ஆராய்வும் "அதபு, ஒழுக்கமுமிழந்து இடர்ப்பட்டுப்போக்கதுமன்றி, அவ்வாசிரியராகிய சன்மார்க்கசீலரிற்பல தூஷணமாரிபொழிந்து அவர் மனங்கோதிக்க அச்சடன்றிப் பலவாறு கிர்கிதது, எழுத்தின்வழு, சொல்வழு, பொருள்வழு முதலிய இலக்கண வழுக்களோடு மார்க்கச் சட்டப் பிரமாண வழக்குமாகப் பக்கங்கடோறும் பரிகிக்கிடப்ப "தன்மூக்கறுத்து எதிரிக்குத் துற்சகுனங்காட்டப் புகுந்தவனை நிகர்ப்ப "ஞானதீபாசிரியருக்கு மாறாகப் புத்தகமுடிப்பதொன்றே போதுமென நுதலியவாறு முடித்த அவரது சங்கார நூலை முறையே அநுவாதஞ்செய்து கண்டிக்கப்புகின் 'மணற்சோற்றுட் கல்லாங்கு ஏகவுருவா நிறைந்தவைகண்டு அதன்கட்போந்த சிலவற்றைமாத்திரம் குறிப்பாகவெடுத்துச் சன்மார்க்க ஒழுகல் வழியாகநிராகரித்தேம்.

"கற்கக்கசடறகற்பவைகற்றபின்
நிற்கஅதற்குத்தக"

---

சருவதயாபரனாகிய யா அல்லாஹ்? யாறஹுமான்? யாறஹீம்? எங்களை, குறுஆன், சுன்னத்து இஜ்மாகு, கியாசு, என்னும் 'ஷறகின்,, "உசூல,, களான நேர்வழிக்கி மாறான வழியில் நடத்தாதே நப்சின் கெடுதிகளான பொறாமை, அகங்காரமுதலிய தீயவினைகளை யிருதயத்தில் நாட்டாதே உன்னையும், உனது "குறுஆன்ஷரீபின்,, கட்டளைகளையும், உனதன்புள்ள எங்கள் இரட்சக அஷ்றபுல்முறுசலீன் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களையும அவர்களது அக்குவால, அபுஆல், அருவால, அசுறார், களையும நிலைபெறுபுவர்த்து கேசித்தொழுகி வணங்கவும "ஈமான்,, என்னும் ஞானதீபத்தை யிருதயத்திற் பிரகாசிக்கவுஞ் செய்தருள் புரிவாயாக.

ஆமீன் = ஆமீன்
ஆமீன்.

முற்றும்.

Printed at the Diamond Press, Chapel St; JAFFNA.